[*1999 மார்ச் 23*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இனி வருங்காலத்தில் தமிழ் மாமுனிவர் வடவெல்லைத் தந்தை மங்கலங்கிழார் அவர்களின் வாழ்க்கை வரலாறு இடம் பெறுவது குறித்து பாடநூல் குழு பரிசீலனை செய்ய அறிவுறுத்தப்படும்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வடவெல்லையில் இருக்கின்ற என்னுடைய தொகுதியான பள்ளிப்பட்டும், திருத்தணியும் தமிழகத்தோடு இருப்பதற்கு முதுபெரும் காரணமாக இருந்தவர் வடவெல்லைத் தந்தை என்று பாராட்டப்பட்ட மங்கலங்கிழார் என்ற தமிழ் மாமுனிவர். சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் அரசியலில் இருந்த காரணத்தால் அவருடைய பெயர் சிறப்பாக அறியப்பட்டிருந்தாலும், அதற்கு மூல வித்தாக இருந்தவர் பேராசிரியர் மங்கலங்கிழார் ஆவார். ஒரு துறவி போல வாழ்ந்து ஊர் ஊராகச் சென்று தமிழைக் கற்பித்து அன்றைக்குத் தெலுங்குப் பகுதியாக இருந்த என்னுடைய தொகுதியில் பல தமிழர்களை உருவாக்கிய பெருமை அவரைச் சாரும். நான் செய்த பணியைவிட மங்கலங்கிழார் செய்த பணி மகத்தானது என்று திரு.வி.க. அவர்கள் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் அதேபோல, ம.பொ.சி. அவர்கள்கூட தன்னுடைய வரலாற்று நூலிலே மங்கலங்கிழார் என்ற தமிழ் மாமுனிவரின் அழைப்பின் பேரில் யான் வடவெல்லை சென்றேன் என்று குறிப்பிட்டு, தொடக்க வித்தாக அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை நன்றியோடு குறிப்பிடுகிறார்கள். 1953-லே காலமான மங்கலங்கிழார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை, தன்னலமற்ற ஒரு துறவிபோல வாழ்ந்தவருடைய வரலாற்றை பாடப் புத்தகங்களில் வைப்போமேயானால் மாணவர்களுக்கு அது சிறந்த பாடமாக அமையும். ஆகவே, அந்தக் கருத்தினை அரசு பரிசீலித்து, குறிப்பாக தொடக்கக் கல்வி பாடநூலிலாவது அவருடைய வரலாறு எளிமையாக ஆக்கப்பட்டு வைக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தகைய வரலாற்றை இடம்பெறச் செய்வது மற்ற பேரறிஞர்களுடைய வரலாற்றை வைப்பதைவிட சிறப்பாக இருக்கும். ஏனென்றால், துறவிக்குள்கூட நோக்கம் உண்டு. 'துறவிக்குள்கூட நோக்கம் உண்டு' என்று நான் ஒரு கட்டுரை எழுதினேன். அதிலே துறவிக்குள் நோக்கம் இருக்கிறது, மோட்சம் அடைய வேண்டுமென்று......

1999 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரடியாக வினாவிற்கு வாருங்கள்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: அத்தகைய நோக்கம்கூட இல்லாத ஒரு மாபெரும் மனிதராக வாழ்ந்த மங்கலங்கிழாருடைய வரலாற்றைப் பாடப் புத்தகத்தில் இடம்பெறச் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிரண்டு விளக்கங்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒன்று, பாடப் புத்தகத்தில் இன்னாருடைய வரலாறு வைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்த முடியாது. மிகப் பெரிய தலைவர்களுடைய வரலாறு மட்டும்தான் வரலாறு என்ற முறையில் நான்கு பக்கம், ஆறு பக்கம் என்ற அளவில் பாடப் புத்தகத்தில் இடம் பெறுகிறது. காந்தியடிகள், நேரு போன்றவர்களின் வரலாறு இடம்பெறுகிறது. இன்னும் சொல்லப்போனால், காமராஜருடைய வரலாறுகூட இடம்பெறவில்லை. வரலாறு என்ற முறையில் இடம்பெறவில்லை. அண்ணா அவர்கள் வரலாறுகூட இடம்பெறவில்லை. ஆனால், அவர்கள் சொன்ன கருத்துக்கள் இடம்பெறுகின்றன. திரு.வி.க. வரலாறு இடம்பெறவில்லை. திரு.வி.க. வரலாறு தனிப் புத்தகங்கள் கல்லூரியில் பாடமாகவும், மு.வ. எழுதியதோ அல்லது வேறு ஒருவர் எழுதியதோ இடம்பெறக்கூடிய நிலைமை இருக்கிறதே தவிர, 10-வது வரையில் அல்லது +2 வரையில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தலைவரைப் பற்றிய வரலாற்றை இடம்பெறச் செய்வது என்பது ஒரு நோக்கமாகக் கொண்டு செய்ய முடியாது. மங்கலங்கிழாருடைய பெருமையையோ, புகழையோ வேறு வகையில் ஏதேனும் ஒரு கட்டுரை மூலமாக, கருத்து மூலமாக இடம்பெறச் செய்ய முடியும்.

மற்றொன்று. நோக்கமுடைய துறவி என்று திரு. இராமன் அவர்களே சொன்னார்கள். நோக்கமுடைய துறவிகள் எல்லாம் மாறுபாட்டுக்கு இடம் கொடுக்கக்கூடியவர்கள். அவர் எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக நான் பாராட்ட விரும்புகிறேன். நானும் அந்தக் கொள்கை உடையவன். நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். தமிழ்த் தொண்டு பாராட்டத்தக்கது. ஆனால் ஒரு தனிப் பாடமாக வரமுடியுமா என்பதை N.C.E.R.T.-உடைய ஆலோசனையோடு அதே கண்ணோட்டத்தில் பாடத் திட்டங்களை வகுக்கிற அந்தப் பாட ஆசிரியர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது.

[1999 மார்ச் 23

அவர்களுக்கு இப்படி பல ஆலோசனைகளை வழங்குகிறோம். அந்த ஆலோசனைகளிலே, இவரைப்பற்றியும் கருதிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடவெல்லைப் போராட்டத் தியாகி, மங்கலங்கிழார் அவர்கள், வடவெல்லைக்காக பெரிய போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். அவரோடு போராட்டத்திற்குச் சென்ற ஒரு சிலருக்குப் போராட்ட நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதனை அரசு கவனிக்க வேண்டும். இரண்டாவது, 1996 ஆம் ஆண்டிலிருந்து டாக்டர் இராமன் அவர்கள் மங்கலங்கிழாருக்காகப் பேசி வருகிறார். எனவே, அதைக் கருத்திலே கொண்டு, அந்தப் போராட்டத் தியாகியினுடைய — நான் அந்த ஊருக்குச் சென்றிருக்கிறேன்; அந்தக் குடும்பம் பெரிய குடும்பம்; பெரிய அளவிலே அவர்கள் தியாகம் செய்திருக்கிறார்கள்; போராடியிருக்கிறார்கள்; எதையும் எதிர்பார்க்காமல் செய்திருக்கிறார்கள் — வரலாற்றைப் புத்தகத்திலே பதிக்க இயலவில்லை என்றாலும்கூட, ஒரு சில நிகழ்வுகளையாவது பாடப் புத்தகத்திலே பதிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய இயக்கத்திலே உள்ளவர்கள்தான் எல்லைப் போராட்டங்களைப்பற்றி அதிக முக்கியத்துவம் தர வேண்டுமா, தர வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். என்னுடைய கருத்தைக் கேட்டால், வடவெல்லைப் போராட்டம், தென்னெல்லைப் போராட்டம், மேற்கெல்லைப் போராட்டம், வைக்கம் போராட்டம் என்று எல்லாப் போராட்டங்களும் வர வேண்டும் என்றுதான் விரும்புவேன். ஆனால், சில நேரங்களில், பாட நூல்களைத் தெரிவு செய்கிறவர்கள், புத்தகங்களைத் தெரிவு செய்கிறவர்கள், போராட்ட உணர்வு வரக்கூடிய கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை என்ற ஓர் எண்ணத்திற்கு ஆளாகிறார்கள். இருந்தாலுங்கூட, வரலாறு என்ற அடிப்படையில், எப்படியாவது இடம்பெறச் செய்ய முடியுமானால், அதைப்பற்றி ஆலோசிக்கலாம். மங்கலங்கிழார் அவர்கள் குறித்து, டாக்டர் இராமன் அவர்களுக்கு ஓர் ஈடுபாடு இருக்குமானால், எனக்கும் ஓர் ஈடுபாடு உண்டு.

1999 மார்ச் 23]

என்னுடைய இயக்கத்தைச் சேர்ந்த திரு. அம்பிகாபதி அவர்களுடைய அருமைத் தந்தையார் அவர்கள் என்ற வகையில் அந்த ஈடுபாடு எனக்கு உண்டு.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலங்கிழார் தொடர்பாக இந்த அரசு ஒரு நூற்றாண்டு விழாவை நடத்தியது. அதிலே, அவருக்குச் சிறப்பு செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய இரண்டு நூல்கள் மறுபதிப்புச் செய்ய ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு சிறப்பாக மங்கலங்கிழார் அவர்களுடைய பிரச்சினையைத் தொடர்ந்து எடுத்து, அலசி ஆராய்ந்து வருகிற — நீண்ட நாட்களாக அலசி ஆராய்ந்து வருகிற — நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு இராமன் அவர்கள், அந்த விழாவிற்கு ஏனோ வரவில்லை. ஆனால், ஊர்க்காரர்கள் எல்லாம் திரண்டு வந்திருந்தார்கள். அவருக்கு மட்டும் வர வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்று கருதுகிறேன்.*

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலங்கிழார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை, அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று வேண்டுகோள் விட்டதே நான்தான். அதற்காக, அந்த விழாவை எடுத்ததற்காக, மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அந்த விழா நடைபெற்ற நாளில், நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய தொகுதியிலே, நான்கைந்து பகுதிகளிலே வந்து சிறப்பு செய்ய ஒப்புதல் அளித்து, எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. ஆகவே, அந்த ஓரிரு மணி நேர அவகாசத்திலே, அந்தக் கடமையில் தவறிய உறுப்பினராக நான் இருந்துவிட்டேன். இருப்பினும், அன்னாருக்கு சிறப்பு செய்த தமிழக அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 142, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

142—

சிங்காரவேலர் வாழ்க்கை வரலாற்றைப் பாடமாக்குதல்

***14644—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—